எஸ்.டி.சி எண். 198/2021 தேதி:04.04.2025

<u>ம.சா.ஆ.1 ஆன திரு. சத்தீஸ்குமார் என்பவர் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

புகார்தாரர் நிறுவனத்தின் பதிவு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதி நிறுவனம் நடத்துவதற்கான Aproval உத்தரவினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை தேவைப்பாட்டால் தாக்கல் செய்கிறேன். நான் மேற்கண்ட Approval உத்தரவினை தாக்கல் செய்யததால் எனது நிறுவனம் சட்டப்படி உரிமம் பெற்ற சீட் நிறுவனம் அல்ல என்றால் சரியல்ல. நான் இந்நீதிமன்றத்தில் Incorporation Certificate தாக்கல் செய்யாததால் என் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட Board resolution Extract செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே நான் புகார்தாரர் தரப்பில் சாட்சியம் அளிக்க தகுதி உடையவர் அல்ல என்றால் சரியல்ல. 18.01.2021 தேதியிட்ட காசோலையை எதிரி கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ள நிலையில் எங்கு வைத்து எப்போது கொடுத்தார் என்று சொல்லமுடியுமா என்றால் நுங்கம்பாக்கத்தில் உள்ள எனது அலுவலகத்தின் கிளை மேளாலரிடம் கொடுத்தார். 18.01.2021 அன்று காசோலை கொடுத்தார். அலுவலகத்தில் வைத்து தான் எதிரி காசோலை கொடுத்தார். அலுவலகத்தில் எதிரி காசோலை கொடுத்த போது யார் உடன் இருந்தார் என்றால் நேரடியாக அந்த விவரம் எனக்கு தெரியாது. காசோலையில் கண்ட தொகைக்கு எதிரியிடம் அந்த நிலுவை தொகைக்கு உண்டான Statement கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் நிலுவை தொகைக்கான Statement சரிபார்த்த பின்பு தான் எதிரி காசோலை கொடுத்தார்.

மேற்சொன்ன நிலுவைத் தொகைக்காக Statement ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நான் புகாரில் குறிப்பிட்டுள்ள சீட்டுத் தொகைக்கான டிக்கெட் எண் பொருத்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எதிரி செலுத்தவேண்டியதாக புகாரில் குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை எவ்வாறு வரையறுக்கப்பட்டது என்ற விவரங்களை சொல்ல முடியுமா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். எதிரி வாதி நிறுவனத்தில் சீட்டில் சேர்ந்ததற்கான ஒப்பந்தம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மேற்சொன்ன விவரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் எதிரி எனது நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டியதாக புகாரில் சொல்லப்படும் நிலுவை தொகைக்குண்டான விவரம் மற்றும் Terms and conditions ஆகியவற்றை நான் நீதிமன்றத்தில் முறையாக நிரூபணம் செய்ய தவறிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனத்துடன் எதிரிக்கு போடப்பட்டதாக சொல்லப்படும் ஒப்பந்தத்தில் Arbitration Clause உள்ளதா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் அதை பற்றி சொல்ல முடியும். வாதி நிறுவனம் சார்பாக எதிரி மீது Money Recovery Suit கோரி சிவில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து பணமீட்புக்காக வேறு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி புகாரில் கண்ட தொகையை வாதி வங்கிக்கு கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்பதால் தான் எதிரி மீது பணமீட்பு கோரி வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கிலும்

தொடர்புடைய ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி 18.01.2021 அன்று காசோலையை வாதி நிறுவனத்திற்கு கொடுக்கவில்லை என்றாலும், எதிரி சீட்டில் சேர்ந்த சமயம் அத்தாட்சிக்காக வாங்கப்பட்ட காசோலையை வைத்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தகுந்த கணக்கு வழக்கு தாக்கல் செய்யாமல் காசோலையில் கண்ட தொகையை வாதி நிறுவனமே பூர்த்தி செய்து கொண்டது என்றாலும் சரியல்ல. எனவே எதிரி சட்டப்படி கடனுக்காக இவ்வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 18.01.2021 அன்றே எதிரி காசோலையை வங்கியில் தாக்கல் செய்யச்சொன்னார். 01.02.2021 ஆம் தேதியன்று காசோலை திருப்பப்பட்டுள்ள நிலையில் எப்போது காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 18.01.2021 அன்று காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் 2 நாட்களுக்குள் திருப்பப்பட்டிருக்கும் என்றாலும் ஆனால் 01.02.2021 ஆம் தேதியன்று காசோலை திருப்பப்பட்ட நிலையில் 30 நாட்கள் தாண்டி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பும் அதன் பேரில் தாக்கல் செய்யப்பட்ட இப்புகாரும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.